ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2020.03.31 |

## பணவீக்கம் 2020 மாச்சில் குறைவடைந்தது

**முதன்மைப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் : 5.4%
ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் : 4.7%
மாதாந்த மாற்றம் : -0.9%

**மையப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம்: 2.9%
ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் : 4.9%
மாதாந்த மாற்றம் : 0.0%







கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2020 பெப்புருவரியின் 6.2 சதவீதத்திலிருந்து 2020 மாச்சில் 5.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு, உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாக அமைந்தன. அதன்படி, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான உணவுப் பணவீக்கமானது 2020 பெப்புருவரியின் 14.7 சதவீதத்திலிருந்து 2020 மாச்சில் 12.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான உணவல்லாப் பணவீக்கமானது 2020 மாச்சில் 2.5 சதவீதத்தினைப் பதிவுசெய்தது.

எவ்வாறாயினும், ஆண்டுச் சராசரியின் அடிப்படையில் அளவிடப்பட்டவாறான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றமானது 2020 பெப்புருவரியின் 4.6 சதவீதத்திலிருந்து 2020 மாச்சில் 4.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம் 2020 மாச்சில் -0.9 சதவீதத்தினைப் பதிவுசெய்ததுடன், இதற்கு உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியே

[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013 = 100) தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

காரணமாக அமைந்தன. உணவு வகையினுள் மரக்கறிகள், சின்ன வெங்காயம் மற்றும் பாணின் விலைகள் 2020 மாச்சில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்திருந்தன. எவ்வாறாயினும், சுகாதாரம் (குருதிப் பரிசோதனைக் கட்டணம்) மற்றும் போக்குவரத்து (விமானக் கட்டணங்கள்) துணை வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் அதிகரிப்புக் காரணமாக உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான மையப் பணவீக்கமானது, தொடர்ச்சியாக ஆறு மாதங்களாக வீழ்ச்சியடைகின்ற போக்கினைத் தொடர்ந்திருந்ததுடன், 2020 பெப்புருவரியின் 3.2 சதவீதத்திலிருந்து 2020 மாச்சில் 2.9 சதவீதத்திற்கு சரிவடைந்திருந்தது. இதேவேளையில், ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கமும் 2020 பெப்புருவரியில் 5.1 சதவீதத்திலிருந்து அதன் நான்கு மாத தாழ்ந்தளவிலான 4.9 சதவீதத்திற்கு 2020 மாச்சில் வீழ்ச்சியடைந்தது.

**தரவு இணைப்பு:**

**அட்டவணை 1: கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள் (2013 = 100)**

| ஆண்டு | மாதம் | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) |
| 2018 | சனவரி | 122.8 | 125.6 | -0.1 | 0.6 | 5.8 | 3.5 | 6.6 | 5.6 |
| | பெப்புருவரி | 121.9 | 125.8 | -0.7 | 0.2 | 4.5 | 3.5 | 6.4 | 5.3 |
| | மாச்சு | 121.4 | 125.9 | -0.4 | 0.1 | 4.2 | 3.4 | 6.1 | 5.0 |
| | ஏப்பிறல் | 121.5 | 126.2 | 0.1 | 0.2 | 3.8 | 3.5 | 5.9 | 4.7 |
| | மே | 122.9 | 126.4 | 1.2 | 0.2 | 4.0 | 3.2 | 5.7 | 4.5 |
| | யூன் | 125.4 | 127.0 | 2.0 | 0.5 | 4.4 | 3.4 | 5.6 | 4.4 |
| | யூலை | 125.8 | 127.3 | 0.3 | 0.2 | 5.4 | 3.9 | 5.6 | 4.3 |
| | ஓகத்து | 125.8 | 127.5 | 0.0 | 0.2 | 5.9 | 3.7 | 5.6 | 4.1 |
| | செத்தெம்பர் | 124.9 | 128.0 | -0.7 | 0.4 | 4.3 | 3.8 | 5.4 | 3.9 |
| | ஒத்தோபர் | 124.6 | 128.1 | -0.2 | 0.1 | 3.1 | 3.8 | 5.0 | 3.8 |
| | நவெம்பர் | 126.2 | 128.9 | 1.3 | 0.6 | 3.3 | 3.4 | 4.6 | 3.6 |
| | திசெம்பர் | 126.3 | 128.8 | 0.1 | -0.1 | 2.8 | 3.1 | 4.3 | 3.5 |
| 2019 | சனவரி | 127.4 | 132.5 | 0.9 | 2.9 | 3.7 | 5.5 | 4.1 | 3.7 |
| | பெப்புருவரி | 126.8 | 132.6 | -0.5 | 0.1 | 4.0 | 5.4 | 4.1 | 3.8 |
| | மாச்சு | 126.6 | 133.0 | -0.2 | 0.3 | 4.3 | 5.6 | 4.1 | 4.0 |
| | ஏப்பிறல் | 127.0 | 133.1 | 0.3 | 0.1 | 4.5 | 5.5 | 4.1 | 4.2 |
| | மே | 129.0 | 134.2 | 1.6 | 0.8 | 5.0 | 6.2 | 4.2 | 4.4 |
| | யூன் | 130.2 | 134.4 | 0.9 | 0.1 | 3.8 | 5.8 | 4.2 | 4.7 |
| | யூலை | 130.0 | 134.6 | -0.2 | 0.1 | 3.3 | 5.7 | 4.0 | 4.8 |
| | ஓகத்து | 130.1 | 134.6 | 0.1 | 0.0 | 3.4 | 5.6 | 3.8 | 5.0 |
| | செத்தெம்பர் | 131.1 | 135.2 | 0.8 | 0.4 | 5.0 | 5.6 | 3.9 | 5.1 |
| | ஒத்தோபர் | 131.3 | 135.2 | 0.2 | 0.0 | 5.4 | 5.5 | 4.0 | 5.3 |
| | நவெம்பர் | 131.7 | 135.5 | 0.3 | 0.2 | 4.4 | 5.1 | 4.1 | 5.4 |
| | திசெம்பர் | 132.4 | 135.0 | 0.5 | -0.4 | 4.8 | 4.8 | 4.3 | 5.5 |
| 2020 | சனவரி | 134.6 | 136.5 | 1.7 | 1.1 | 5.7 | 3.0 | 4.5 | 5.3 |
| | பெப்புருவரி | 134.6 | 136.9 | 0.0 | 0.3 | 6.2 | 3.2 | 4.6 | 5.1 |
| | மாச்சு | 133.4 | 136.9 | -0.9 | 0.0 | 5.4 | 2.9 | 4.7 | 4.9 |

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்